செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 299 நாள் : 28/5/18

பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு ஆசிரியர் தகுதி தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகளில் சேர்ந்து பயிற்சி பெற்றிட பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளில் ஆசியர் பயிற்சியில் இளநிலை கல்வியியல் பட்டம் (பி.எட்) முடித்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ. ராமன், இ.ஆ.ப., அவர்களின் அறிவிப்பு

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மற்றும் பள்ளி கல்வித்துறை மூலம் ஆசிரியர் பயிற்சி முடித்துள்ள பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு ஆசிரியர் தகுதி தேர்விற்கான (டி.இ.டி.) இலவச பயிற்சி வழங்கப்படவுள்ளது. எனவே, வேலூர் மாவட்டத்தில் வசிக்கும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளில் ஆசிரியர் பயிற்சியில் இளநிலை கல்வியியல் பட்டம் (பி.எட்) முடித்த, ஆசிரியர் தகுதி தேர்வு எழுதிட விருப்பமுள்ள பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் இலவச பயிற்சி பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது எனவே, பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்ட் மாற்றுத்திறனரிகள் நல அலுவலகம், பழைய பஞ்சாயத்து அலுவலக வளாகம், அண்ணா சாலை, வேலூர் – 632 001 தொலைபேசி எண்: 0416 - 2222737 என்ற முகவரிக்கு 30.05.2018க்குள் அனுப்பி வைத்து இலவச பயிற்சிக்காக தங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

இவ்வாறு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சி.அ.இராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
வேலூர்.